இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு**

*இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழு மேன்முறையீடு (அந்நபரினூடாக) /1491//2019- 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் உரிமைக்கான சட்டத்தின் பிரிவு 32(1) இன் கீழான கட்டளை மற்றும் 2016 ஆம் ஆண்டு தகவல் உரிமைக்கான விதிகளின் (கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறை) 28 ஆம் விதிக்கு கீழான நடபடிமுறை பதிவு - மேன்முறையீடானது 02.07.2019 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வமான சந்திப்புக்களின் ஒரு அங்கமாகக் கேட்கப்பட்டது.*

**ஆணைக்குழு உறுப்பினர்கள்:** செல்வி. கிஷாலி பின்ரோ ஜயவர்தன
திரு. எஸ். ஜி. புஞ்சிஹேவா
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்

**மேன்முறையீட்டாளர்:** மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

**அறிவித்தல் வழங்கப்பட்ட நபர்:** குறித்தளிக்கப்பட்ட அலுவலர், நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு

**தோன்றல் அல்லது பிரதிநிதித்துவம்:**
**மேன்முறையீட்டாளர்:** பசன் ஜயசிங்க, சட்டத்தரணி
தகவல் அலுவலர், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

**பகிரங்க அதிகார சபை:** ஏ. மன்சூர்- மேலதிக செயலாளர், நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு
ஜி.பி.ஏ. சிறிமலதா- எஸ்.ஏ.எஸ் (நிர்வாகம்), நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு
கே.ஏ.ஏ.எல்.பி. குணவர்தன, உதவி பொலிஸ் அத்தியட்சகர், சிறைச்சாலைகள் திணைக்களம்

| | |
|---|---|
| **தகவல் உரிமைக்கான கோரிக்கை பதியப்பட்டது** | 01.03.2019 |
| **தகவல் அலுவலர் பதிலளித்தது** | 04.04.2019 |
| **குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடம் முதலாவது மேன்முறையீடு பதியப்பட்டது** | 11.04.2019 |
| **குறித்தளிக்கப்பட்ட அலுவலர் பதிலளித்தது** | 06.05.2019 |
| **தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு பதியப்பட்டது** | 05.06.2019 |

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

**சுருக்க நிகழ்வுப் பின்னணி**

01.03.2019 எனத் திகதியிடப்பட்டத் தகவல் கோரிக்கையொன்றினூடாக மேன்முறையீட்டாளர் கீழ்வரும் தகவல்களைக் கோரியிருந்தார்:

1. 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட, போதைப் பொருட்கள் தொடர்பான குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்படக்கூடிய நிலையில் காணப்பட்ட நபர்களின் பெயர்ப்பட்டியல்
2. 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட, போதைப் பொருட்கள் தொடர்பான குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்படக்கூடிய நிலையில் காணப்பட்ட நபர்களுக்கான தண்டனை அளிக்கப்பட்ட திகதிகள் மற்றும் அவர்களுடைய வழக்கு இலக்கங்கள்

04.04.2019 அன்று பதிலிறுத்த தகவல் அலுவலர் 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் உரிமைக்கான சட்டத்தின் பிரிவு 5 (1) (அ) மற்றும் 5(1)(எ) என்பவற்றினை மேற்கோள் காட்டி தகவலை வெளியிட மறுத்திருந்தார். இப்பதிலில் அதிருப்தியடைந்த மேன்முறையீட்டாளர் 11.04.2019 அன்று குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடம் மேன்முறையீட்டினைப் பதிவு செய்தார். 06.05.2019 அன்று பதிலிறுத்த குறித்தளிக்கப்பட்ட அலுவலர் சட்டத்தின் பிரிவு 5(1)(அ) இனை மேற்கோள் காட்டி தகவலை மறுத்திருந்தார். அதன் பின்னர் 05.06.2019 அன்று மேன்முறையீட்டாளர் ஆணைக்குழுவில் மேன்முறையீடொன்றினைப் பதிவு செய்தார்.

இக்குறிப்பிட்ட மேன்முறையீடானது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பிரஜைகளின் உயிர் மற்றும் தனிப்பட்ட சுதந்திரம் என்பனவற்றுடன் தொடர்புறுகின்றமையினால் இதனை உடனடியாக கவனத்திற் கொள்ளுமாறு மேன்முறையீட்டாளர் 26.06.2019 எனத் திகதியிடப்பட்ட மின்னஞ்சலினூடாக கோரியிருந்தார். ஜனாதிபதி 26.06.2019 அன்று போதைப் பொருட்களுடன் தொடர்புடைய குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள நபர்களுள் நான்கு பேரின் மரண ஆணைகளில் தாம் கையெழுத்திட்டுள்ளதாக மேற்கொண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து இக்கோரிக்கையினை மேற்கொண்டுள்ளதாக கூட்டிக்காட்டிய மேன்முறையீட்டாளர் அந்நான்கு நபர்களின் பெயர்களும் தனது தகவல் கோரிக்கையின் முதலாவது பிரிவின் கீழ் உள்ளடக்கப்படும் என்பதனை குறித்து காட்டினார். மேலும், ஊடக அறிக்கைகளின்படி பார்க்கின்றபோது குறிப்பிட்ட மரண தண்டனைகளை நிறைவேற்றுவதற்கான நிச்சயமான காலப்பகுதியொன்றைக் குறிப்பிடாது, அவை “விரைவாக” மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி உறுதிப்படுத்தியுள்ளார் என்பது தெரிய வருகின்றது என்று மேன்முறையீட்டாளர் தெரிவித்தார். “ஊடக அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றபோது, தேசிய போதை ஒழிப்பு வாரம் 01.07.2019 உடன் நிறைவிற்கு வருகின்றமையினால் மரண தண்டனை விரைவாக நிறைவேற்றப்படலாம் என நம்புவதற்கான காரணங்கள் இருப்பதாக” மேன்முறையீட்டாளர் சமர்ப்பித்தார்.

01.03.2019 மற்றும் 26.06.2019 ஆகிய தினங்களில் திகதியிடப்பட்ட தகவல் கோரிக்கைகள் உண்மையில் சில பிரஜைகளுடைய உயிர் மற்றும் சுதந்திரம் என்பனவற்றுடன் தொடர்புறுகின்றன என்ற நிகழ்வினை கருத்திற்கொண்ட ஆணைக்குழு இம்மேன்முறையீடு மீது துரித கவனம் செலுத்தி 02.07.2019 அன்று ஆராயப்படுவதற்கென இம்மேன்முறையீட்டினை பட்டியற்படுத்தியது.

இத்தகவல் கோரிக்கையில் கோரப்பட்டுள்ள தகவல்களை ஒத்த மற்றுமொரு தகவல் கோரிக்கைக்கான மேன்முறையீடு (தகவலுரிமை ஆணைக்குழு மேன்முறையீடு /1492/2019)01.07.2019 அன்று மற்றுமொரு பிரஜையினால் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு எதிராக ஆணைக்குழுவில்

மின்னஞ்சலூடாகப் பதிவு செய்யப்பட்டது. ஆணைக்குழுவின் கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறைகள் மீதான ஒழுங்குவிதிகளின் (வர்த்தமானி இல. 2004/66, 03.02.2017) 13 (2) ஆவது ஒழுங்குவிதியின் கீழ் மேன்முறையீடானது நேரடியாக அல்லது பதிவுத் தபாலினூடாகக் கையளிக்கப்படுதல் வேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்டபோதும், குறிப்பிட்ட இச்சந்தரப்பத்தின் அவசரத்தன்மையினையும் குறிப்பிட்ட மேன்முறையீட்டு விடயப்பொருள் ஏற்கனவே கிடைக்கப்பெற்றுள்ள மேன்முறையீட்டு விடயப்பொருளுடன் ஒத்தத் தன்மையாயிருப்பதனையும் கருத்திற்கொண்டு குறிப்பிட்ட மேன்முறையீடுகள் தற்போதுள்ள இம்மேன்முறையீட்டுடன் 02.07.2019 அன்று ஒன்றாக விசாரிக்கப்படுமென தீர்மானிக்கப்பட்டது. அத்துடன், தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 3 இன்படி கோரப்பட்டுள்ளத் தகவல்களின் உடைமை, பாதுகாவல் மற்றும் கட்டுப்பாடு காணப்படக்கூடிய பொருத்தமானதொரு பகிரங்க அதிகார சபையாக சிறைச்சாலைகள் திணைக்களம் காணப்படுவதாகத் தோன்றுவதனாலும் இவ்விரு மேன்முறையீடுகளும் ஒன்றாக கவனத்திற்கெடுத்துக்கொள்ளப்பட்டன.

மேலும், சட்டத்தின் பிரிவு 25(3) இற்கமைய குறிப்பிட்ட தகவல் கோரிக்கை பிரஜையின் உயிர் மற்றும் சுதந்திரத்துடன் தொடர்புகின்றமையினால் கீழ்வரும் தகவல்களை 48 மணித்தியாலங்களிற்குள் வழங்கும்படி நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு, ஜனாதிபதி செயலகம் மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் போன்ற பகிரங்க அதிகார சபைகளில் 26.06.2019 அன்று தகவல் கோரிக்கைகளை பதிவு செய்ததாக மேன்முறையீட்டாளர் சமர்ப்பித்தார்:

01. ஜனாதிபதியினால் 26.06.2019 அன்று ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டமைக்கமைய, ஜனாதிபதி மரண தண்டனைக்கான ஆணையில் கையெழுத்திட்டுள்ள அந்நான்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளின் பெயர்கள்
02. ஜனாதிபதி மரண தண்டனைக்கான ஆணையில் கையெழுத்திட்டுள்ள அந்நான்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளின் தண்டனைத் திகதிகள் மற்றும் வழக்கு எண்கள்
03. ஜனாதிபதி மரண தண்டனைக்கான ஆணையில் கையெழுத்திட்டுள்ள அந்நான்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளின் மரண தண்டனை நிறைவேற்றப்படப்போகின்ற நாட்கள்

**விளக்கத்தின்போது தோன்றிய தகவல்கள்:**

இம்மேன்முறையீட்டின் மேன்முறையீட்டாளர் மற்றும் தகவலுரிமை ஆணைக்குழு மேன்முறையீடு /1492/2019 என்ற இலக்கத்தினையுடைய மேன்முறையீட்டின் மேன்முறையீட்டாளர் ஆகிய இருவரும் மேன்முறையீட்டு விளக்கங்களில் பங்குபற்றியிருந்தனர். சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு பொருத்தமான பகிரங்க அதிகார சபைகளாக தோன்றியிருந்தன.

முதலில் தகவல் அலுவலர் கீழே குறித்து காட்டப்பட்டுள்ள சட்டத்தின் பிரிவு 5(1)(அ) மற்றும் (எ) ஆகிய பிரிவுகளின் கீழ் தகவலை வெளியிட மறுத்ததாகவும் பின்னர் குறித்தளிக்கப்பட்ட அலுவலர் பிரிவு 5(1)(அ) இனை மட்டும் சுட்டிக்காட்டித் தகவலை வெளியிட மறுத்ததாகவும் மேன்முறையீட்டாளர் சமர்ப்பித்தார்:

5(1)(அ) பாரிய பகிரங்க அக்கறை அத்தகைய தகவலின் வெளிவிடுகையை நீதிமுறைப்படுத்தினாலொழிய அல்லது சம்பந்தப்பட்ட ஆள் அத்தகைய வெளிவிடுகைக்கு எழுத்தில் சம்மதமளித்திருந்தாலொழிய, ஏதேனும் பகிரங்க தொழிற்பாடு அல்லது அக்கறைக்கு தொடர்பல்லாததாகவுள்ள அல்லது தனியாளின் அந்தரங்கத் தன்மையின் அனுமதிக்கப்படாத

வரம்புமீறலைச் செய்யக்கூடிய தனிப்பட்ட தகவலின் வெளிவிடுகையுடன் தொடர்புறுகின்றவிடத்து, அத்தகவல்;

(எ) ஒரு நம்பக உறவு நிலைத்திருக்கும் காரணத்தால் தகவலானது அந்தரங்கமாக வைத்திருக்கத் தேவைப்படுத்தப்படுமிடத்து அத்தகையத் தகவல்,

இதற்கு மறுதலையாக, உண்மையில் 01.03.2019 எனத் திகதியிடப்பட்டத் தகவல்கோரிக்கையின் ஒன்றாம் பிரிவின்கீழ் கேட்கப்பட்டதன்படி, அதாவது போதை பொருட்கள் தொடர்பான குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள மற்றும் அத்தகைய மரண தண்டனையை நிறைவேற்றக்கூடிய நபர்களின் பெயர்பட்டியல் 2019 பெப்ரவரி மாதம் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டதா என நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சிடம் வினவப்பட்டது. அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்திய நபர்கள் அது தொடர்பாகத் தாம் அறிந்திருக்கவில்லை என பதிலளித்ததுடன் மேன்முறையீட்டாளரினால் கோரப்பட்டத் தகவல்கள் உண்மையில் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் உடைமை, பாதுகாவல் மற்றும் கட்டுப்பாட்டில் காணப்படும் என்ற ஊகத்திலேயே மேன்முறையீட்டாளருக்கு பதிலிறுத்ததாகத் தெரிவித்தனர்.

போதை பொருட்களுடன் தொடர்புடைய குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த 20 நபர்களை உள்ளடக்கியப் பட்டியலொன்று அமைச்சினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் தெரிவித்தனர். எவ்வாறெனினும், அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் தாம் அறிந்தளவில் அத்தகைய ஒரு பட்டியல் அமைச்சிற்கு வழங்கப்படவில்லையென்றும், எவ்வாறெனினும், சிறைச்சாலைகள் திணைக்களத்துடன் இணைந்து பணியாற்றுகின்ற அமைச்சின் மற்றுமொரு பிரிவிற்கு அத்தகையதொரு பட்டியல் கிடைக்கப்பெற்றிருக்கலாம் எனவும், அதனைத் தாம் உறுதிப்படுத்துவதாகவும் தெரிவித்தனர்.

சிறைச்சாலைகள் திணைக்களத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியவர் குறிப்பிட்டத் தகவல் அதன் உடைமை, பாதுகாவல் மற்றும் கட்டுப்பாட்டில் இருப்பதாகத் தெரிவித்தார். எவ்வாறெனும், குறிப்பிட்ட தகவல்களின் வெளியிடுகை சம்பந்தப்பட்ட சிறைக்கைதிகளின் அந்தரங்கத்தினை பாதிக்கும் என்பதனால் அதனை வெளியிடுதல் சிக்கலானது எனத் தெரிவத்தார். அதற்கு பதிலிறுத்த மேன்முறையீட்டாளர், குறிப்பிட்ட சிறைக்கைதிகளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்களுடைய பெயர்கள் பகிரங்கப்பரப்பிற்கு வெளியாகியிருக்குமெனவும், சிறைச்சாலைகள் திணைக்களம் ஏற்கனவே பகிரங்க பரப்பில் வெளியாகியுள்ள பெயர்களையே மீண்டும் வெளியிட போகின்றதெனவும் சுட்டிக்காட்டினார். மேலும், கோரப்பட்டத் தகவல்கள் பிரிவு 5(1)(அ) இன் பரப்பிற்குள் உள்ளடக்கப்பட மாட்டாது எனவும், அவ்வாறு உள்ளடக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில்கூட தகவலின் வெளியிடுகையினால் ஏற்படுத்தப்படுகின்ற ஊறினை அதன் வெளியிடுகையிலுள்ள பகிரங்க அக்கறை விஞ்சி நிற்பதாக சுட்டிக்காட்டப்பட்டது. சம்பந்தப்பட்ட சிறைக்கைதிகளின் சம்மதமின்றி குறிப்பிட்ட தகவல்களைத் தம்மால் வெளியிட முடியாதென சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்ததுடன் பிரிவு 24 (5) (இ) இன் கீழான தெளிவுபடுத்தலொன்றினையும் கோரியது. பிரிவு 24(5)(இ) பின்வருமாறு கூறுகின்றது:

*தகவல் ஆளொருவரின் உயிர் அல்லது சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு அவசியமாகவிருக்கக்கூடியதென பிரசையினால் நம்புகின்றவிடத்து, நம்பிக்கைக்கான அடிப்படை உட்பட அதன் பயன்பட கூற்றொன்றையும் உள்ளடக்குதல் வேண்டும்;*

மேன்முறையீட்டாளரின் தகவல் கோரிக்கையில் காணப்படுகின்ற தகவல் ஒரு நபரின் உயிர் அல்லது சுதந்திரத்தை பாதுகாக்க அவசியமானதென மேன்முறையீட்டாளர் நம்புவதற்கான அடிப்படைய யாதென சிறைச்சாலைகள் திணைக்களம் வினவியது. இதற்கு பதிலிறுத்த மேன்முறையீட்டாளர், ஜனாதிபதி 26.06.2019 அன்று ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் போதை பொருள் தொடர்பான குற்றங்களுக்கான மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள நபர்களில் நான்கு பேருடைய மரண தண்டனை நிறைவேற்றத்திற்கு தான் கையெழுத்திட்டுள்ளதாக கூறியமையே இத்தகவல்களை அவசரமாகக் கோருவதற்கான காரணம் என தெளிவுபடுத்தினார்.

**ஆணை:**

ஒரு பிரஜையினுடைய உயிர் மற்றும் சுதந்திரம் தொடர்புறுகின்றபோது தகவலுக்கான கோரிக்கை தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 25(3) இன் கீழ் பதியப்படலாம் என கூறப்பட்டுள்ளதேயொழிய, அதற்கப்பால் அத்தகவல் கோரிக்கை தொடர்பான ஏனைய நடபடிமுறைகள் குறித்து சட்டத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதனை ஆரம்பத்திலேயே குறித்து கொள்தல் வேண்டும்.

பிரிவு 25(3) பின்வருமாறு கூறுகின்றது:

*தகவலுக்கான கோரிக்கையானது, ஒரு பிரசையின் உயிர் மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்துடன் சம்மந்தப்படுகின்றவிடத்து, அதற்கான பதிலளிப்பு கோரிக்கை கிடைக்கப்பெற்றதிலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குள் செய்யப்படுதல் வேண்டும்.*

ஆகவே, இவ்விடயத்தின் தீவிரத் தன்மையினையும் மற்றும் பிரிவு 25(3) இல் வழங்கப்பட்டுள்ள ஆணையினையும் கருத்திற்கொண்டு பார்க்கின்றபோது, இத்தகையத் தகவல் கோரிக்கையின் மேன்முறையீட்டு நடபடிமுறைகளிலும் அத்தகைய அவசரத்தன்மை பேணப்படுதல் வேண்டுமென சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதாகத் தர்க்கரீதியாக ஊகிக்கலாம் என்பதனால், இவ் ஆணைக்குழு இம்மேன்முறையீட்டையும் “தகவலுரிமை ஆணைக்குழு மேன்முறையீடு /1492/2019” என்ற இலக்கத்தினையுடைய மேன்முறையீட்டையும் அவசர மேன்முறையீடுகளாக தனது முன்னிலையில் பட்டியற்படுத்தியுள்ள. இது இம்முறையில் பதிவு செய்யப்படுகின்றது என்பதுடன், இவ்விளக்கத்தின்போது இது குறித்து பதிலிறுக்கின்ற பகிரங்க அதிகார சபைகளிடமிருந்து எவ்வித நடபடிமுறை அல்லது நியாயாதிக்க ஆட்சேபனைகளும் எழுப்பப்படவில்லை என்பதும் பதிவு செய்து கொள்ளப்படுகின்றது.

தற்போது ஆணைக்குழு முன்னிலையிலுள்ள இம்மேன்முறையீடு தொடர்பாகப் பார்க்கின்றபோது, போதைப் பொருட்களுடன் தொடர்புடைய குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இருபது நபர்களின் தண்டனை திகதிகள் மற்றும் வழக்கு இலக்கங்களை வெளியிடுவது தொடர்பில் பிரிவு 5(1) அல்லது அதன் வேறேதும் உபபிரிவுகள் ஆட்சேபனையாக அமையும் என கூற இயலாது. இவை நிறைவுபெற்ற வழக்குகள் தொடர்பான புள்ளிவிபரத் தரவுகளே ஆகும். ஆகவே, அத்தகவல்கள் தொடர்பில் எவ்வித அந்தரங்கத் தன்மையும் கிடையாது. ஆகவே, சிறைசச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டத் தகவல்களை மேன்முறையீட்டாளருக்கு வெளியிட வேண்டுமென பணிக்கப்படுகின்றது.

சிறைக்கைதிகளின் பெயர்கள் தொடர்புறுகின்ற விடயத்தைப் பார்க்கின்றபோது, குறிப்பிட்ட அத்தனிநபர்களின் எழுத்துமூலமான சம்மதத்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு பணிக்கப்படுகின்றது. அத்தனிநபர்கள் அவர்களுடைய பெயர்கள் பகிரங்கமாக

வெளியிடப்படுவதனை விரும்பாத சந்தர்ப்பத்தில், ஆணைக்குழு பிரிவு 5(1) இனை பிரிவு 5(4) உடன் இணைத்து வாசித்து அது தொடர்பான ஆணையினை வழங்கும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும், கோரப்பட்டத் தகவல்கள் ஆணைக்குழுவின் நம்பகத்தன்மையை வாய்ந்த ஆராய்விற்காக ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். பகிரங்க அதிகார சபையின் கவனம் பிரிவு 15(இ) தொடர்பில் ஈர்க்கப்பட்டது. பிரிவு 15(இ) பின்வருமாறு கூறுகின்றது:

*இச்சட்டத்தின்கீழ் அதனது கடமைகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கும் அதனது பணிகளைப் புரியும் நோக்கத்திற்குமென ஆணைக்குழு இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பகிரங்க அதிகார சபையொன்றினால் மறுக்கப்படும் ஏதேனும் தகவலுட்பட பகிரங்க அதிகாரசபையொன்றினால் வைத்திருக்கப்படும் ஏதேனும் தகவலை சோதனை செய்யும் அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

சட்டத்தின் பிரிவு 3 இற்கமைய, 01.03.2019 எனத் திகதியிடப்பட்ட தகவல் கோரிக்கையில் கோரப்பட்டுள்ளத் தகவல்கள் தொடர்பாகத் தனது பகிரங்க அதிகார சபையின் உடைமை, பாதுகாவல் மற்றும் கட்டுப்பாட்டிலுள்ள பொருத்தமான ஆவணங்களை அடுத்த விளக்கத்தின்போது ஆணைக்குழுவிற்கு கையளிக்கவேண்டுமென சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு பணிக்கப்படுகின்றது.

சிறைக்கைதிகளின் பெயர்களை வெளியிடுவது தொடர்பாக குறிப்பிட்ட அத்தனிநபர்களின் எழுத்துமூலமான சம்மதத்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு பணிக்கப்படுகின்றது. அவர்கள் தமது பெயர்களை வெளியிட சம்மதமளிப்பதனை அல்லது சம்மதமளிக்க மறுப்பதனைத் தொடர்ந்து ஆணைக்குழு பிரிவு 5(1)(அ) மற்றும் பிரிவு 5(4) இல் கூறப்பட்டுள்ள பகிரங்க அக்கறையினை ஆராய்ந்து பார்த்து அது தொடர்பான ஆணையினை வழங்கும்.

மேன்முறையீட்டாளர் விரும்புவாராயின் அவர் தனது எழுத்துமூலமான சமர்ப்பிப்புக்களை மேற்கொள்ள இயலும். குறிப்பாக, குறிப்பிட்ட சிறைக்கைதிகள் அவர்களுடைய பெயர்களை வெளியிட விரும்பாத சந்தர்ப்பத்தில், அதாவது பிரிவு 5(1)(அ) பிரயோகப்படுத்தப்படுகின்றபோது, போதைப் பொருட்களுடன் தொடர்புடைய குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இருபது நபர்களின் பெயர்களை பிரிவு 5(4) இன் கீழ் வெளியிடுவதற்கான பகிரங்க அக்கறை தோன்றுகின்ற விதம் தொடர்பான சமர்ப்பிப்புக்களை மேற்கொள்ள இயலும்.

மேன்முறையீட்டாளரினால் பின்னர் பதிவு செய்யப்பட்ட தகவல் கோரிக்கைகள் தொடர்பில் பார்க்கின்றபோது, அதாவது 26.06.2019 அன்று பதிவு செய்யப்பட்ட தகவல் கோரிக்கைகள் தொடர்பில் பார்க்கின்றபோது, இச்சந்தர்ப்பத்தில் ஆணைக்குழுவினால் துரிதமான நடபடிமுறைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டபோதிலும், பதிவினிமித்தம் குறிப்பிட்ட பகிரங்க அதிகார சபையின் குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீடொன்றினைப் பதிவு செய்யுமாறும், அம்மேன்முறையீட்டிற்கான பதில் பகிரங்க அதிகார சபையினால் வழங்கப்படாத பட்சத்தில் அல்லது திருப்திகரமான பதில் கிடைக்காத பட்சத்தில் ஆணைக்குழுவல் மேன்முறையீடொன்றினைப் பதிவு செய்யுமாறும் மேன்முறையீட்டாளருக்கு பணிக்கப்படுகின்றது.

மேன்முறையீடு ஒத்திவைக்கப்படுகின்றது.

அடுத்த விளக்கத்திற்கான திகதி: 09.07.2019